பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

15 10 2026 THURSDAY 12 40 PM

ஆகாஷ்வாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. ஆசிய விளையாட்டு போட்டிகளில் பங்கேற்ற இந்திய அணியினருடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுதில்லியில் கலந்துரையாடுகிறார்.

2. நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பாதுகாப்பு தளவாடங்கள் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. வேளாண் துறை வளர்ச்சியில் பெண் விவசாயிகள் முக்கியப் பங்கு வகிப்பதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை இன்று தொடங்கியது.

5. 23 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Vishvajit Ramachandra more வெள்ளிப்பதக்கம் வென்றார்.

>>>>>><<<<<<

ஆசிய விளையாட்டு போட்டிகளில் பங்கேற்ற இந்திய அணியினருடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று கலந்துரையாடுகிறார்.

புதுதில்லியில் உள்ள மேஜர் தியான்சந்த் தேசிய மைதானத்தில் இன்று மாலை நடைபெறவுள்ள இதற்கான நிகழ்ச்சியில், ஜப்பானில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் இதர அலுவலர்கள் பங்கேற்கின்றனர்.

இப்போட்டிகளில் இந்தியா 21 தங்கம், 27 வெள்ளி, 37 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>>>><<<<<

நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பாதுகாப்பு தளவாடங்கள் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் தனியார் தொலைக்காட்சி செய்தி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த பாதுகாப்பு தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

2014ஆம் ஆண்டு 686 கோடி ரூபாயாக இருந்த பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி, தற்போது 38 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் கூடுதலாக அதிகரித்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

தளவாட உற்பத்தியில் 90 சதவீதம் சுயசார்பினை எட்டியிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு துறையில் கடந்த 12 ஆண்டுகளாக இதுவரை இல்லாத அளவிற்கு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

எந்வொரு சூழ்நிலையையும் எதிர்கொள்வதற்கு ஏதுவாக நமது பாதுகாப்பு படையினர் தயாராக உள்ளதாகவும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

சமூக நிதியுதவி திட்டத்தை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதன் மூலம் 3 கோடிக்கும் மேற்பட்டோர் பயனடைவார்கள் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், மாற்றுத் திறன் கொண்டவர்களுக்கான ஊதியம் பெறுவதற்கு நெறிமுறைகளில் தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேபோல், ரயில்வே ஊழியர்களுக்கு 78 நாட்கள் போனஸ் வழங்குவதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது, ஊழியர்களின் நலனில் மத்திய அரசுக்கு உள்ள உறுதிப்பாட்டை எடுத்துரைப்பதாக உள்ளது என்று திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

வேளாண் துறை வளர்ச்சியின் முதுகெலும்பாக பெண் விவசாயிகள் திகழ்வதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

பெண் விவசாயிகள் தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பெண் விவசாயிகளின் மேம்பாட்டிற்காக ட்ரோன் சகோதரிகள் திட்டம் போன்றவற்றை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வேளாண் துறையில் சுயசார்பு மற்றும் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதில் மகளிர் முக்கியப் பங்கு வகிப்பார்கள் என்றும் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அரசுமுறைப் பயணமாக பாங்காக் சென்றடைந்தார்.

Suvarnabhumi விமான நிலையத்தில் தாய்லாந்திற்கான இந்திய தூதர் திரு. புனித் அகர்வால் நிதியமைச்சரை வரவேற்றார்.

உலக வங்கி மற்றும் சர்வதேச செலாவணி நிதியத்தின் வருடாந்திர கூட்டத்தில் பங்கேற்கும் திருமதி. நிர்மலா சீதாராமன், ஜி.20 மற்றும் ஜி.7 நிதியமைச்சர்கள் மாநாட்டிலும் கலந்து கொள்கிறார்.

>>>>>><<<<<<

இந்திய-ஐக்கிய அரபு எமிரேட் உடனான நல்லுறவு வலுவடைந்து வருவதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக அபுதாபி சென்றுள்ள அவர், அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று பேசினார்.

உலக அளவில் மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப ஒவ்வொரு நாடும் தங்களது அணுகுமுறையை மாற்றிக் கொண்டு செயல்படுவதாக அவர் தெரிவித்தார்.

சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தையும் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

மக்கள் நலனே தேசத்தின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு செயல்பட்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, 25 ஆண்டுகள் பொதுசேவையை நிறைவு செய்துள்ள நிலையில், அவரது தொலைநோக்குப் பார்வையின் கீழ், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

நீடித்த வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டை உறுதி செய்யும் வகையில் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள், மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

இதுதொடர்பான சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது “கட்டுமானத் துறையில் நுகர்வோர் பாதுகாப்பை உறுதி செய்யும் RERA”.

( Voice Over - 90 Sec.)

*(கட்டுமானத்துறையின் வளர்ச்சிக்கும், அதனை ஒழுங்குப்படுத்த வகை செய்யும் வகையில் இந்த RERA சட்டம், கடந்த 2016 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.*

*வீடுகள் வாங்கும் நுகர்வோரின் நலன்களை பாதுகாக்கும் வகையில், இந்த சட்டத்தை மத்திய அரசு கொண்டுவந்துள்ளது.*

*இந்த சட்டத்தின்கீழ், கட்டுமான நிறுவனங்கள் தங்களது திட்டங்களை இதற்கான ஒழுங்குமுறை ஆணையத்தில் பதிவு செய்த பின்னரே அதற்கான விளம்பரத்தை வெளியிட வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.*

*கட்டுமான நிறுவனங்களுக்கும், வீடுகளை வாங்கும் நுகர்வோர்களுக்கும் இடையேயான பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கான அம்சங்கள் இந்த ஒழுங்குமுறை சட்டத்தில் இடம்பெற்றுள்ளன.*

*இந்த துறையில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்கும், இந்த சட்டம் உதவி வருகிறது.)*

*வீடுகளை வாங்குவோருக்கும், கட்டுமான நிறுவனங்களுக்கும் இடையேயான நம்பிக்கையை வலுப்படுத்தும் அம்சங்கள் இந்த சட்டத்தில் இடம்பெற்றுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்தார்.*

*இந்த சட்டம் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.*

*இது தங்களுக்கு பெரிதும் உதவிகரமாக உள்ளது என்று கூறுகிறார் டெல்லியை சேர்ந்த அனில் திவாரி.*

*கட்டுமான நிறுவனங்கள் தங்களது வீடு கட்டும் திட்டங்களை குறித்த காலத்திற்குள் நிறைவேற்றுவதை இந்த சட்டம் உறுதி செய்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.*

*இந்த சட்டம் கட்டுமான நிறுவனங்களுக்கும், வீடுகளை வாங்குபவர்களுக்கும் சட்டப்பூர்வ பாதுகாப்பை உறுதி செய்துள்ளது.*

*கட்டுமானத்துறையில் நீண்டகாலமாக நிலவிவந்த பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் நோக்கில் கொண்டுவரப்பட்ட இந்த சட்டத்தின் மூலம் கட்டுமான நிறுவனங்களும் நுகர்வோர்களும் பயனடைந்து வருகின்றனர். )*

>>>>>><<<<<<

முன்னாள் குடியரசுத் தலைவர் டாகடர் ஏ.பி.ஜே. அப்துல்கலாமின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, தமிழக முதலமைச்சர் திரு. விஜய், மத்திய அமைச்சர்கள் மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் அன்னாருக்கு புகழாரம் சூட்டியுள்ளனர்.

>>>>>><<<<<<

இந்தியாவுடனான வர்த்தக ஒப்பந்தம் நடப்பாண்டு இறுதிக்குள் இறுதி செய்யப்படும் என்று கனடா கூறியுள்ளது.

அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ள கனடா வர்த்தகத்துறை அமைச்சர் திரு. Maninder Sidhu மும்பையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனை தெரிவித்தார்.

இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்தை அதிகரிக்க இந்த ஒப்பந்தம் உதவிடும் என்றும் திரு. Maninder Sidhu கூறினார்.

>>>>>><<<<<<

வடகிழக்கு பருவமழை இன்று தொடங்கியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

புதுதில்லியில் உள்ள வானிலை ஆய்வு மையத்தின் விஞ்ஞானி டாக்டர் நரேஷ்குமார், எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்தார்.

இதற்கிடையே, தமிழக முதலமைச்சர் திரு. விஜய், சென்னையில் மழைநீர் வடிகால் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>><<<<<<

பாகிஸ்தானில் தனியார் பள்ளிக் கட்டிடத்தின் மேற்கூரை இடிந்து விழுந்ததில், 17 குழந்தைகள் உட்பட 18 பேர் உயிரிழந்தனர், 30க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பெஷாவர் நகரில் இன்று காலை இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு காவல்துறை தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

23 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Vishvajit Ramachandra more வெள்ளிப்பதக்கம் வென்றார்.

அமெரிக்காவின் Las Vegas-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்

>>>>>><<<<<<

உலக மல்யத்த சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

Rahul Deswal, Nikhil உள்ளிட்டோர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி, கஜகஸ்தானின் அஸ்தானாவில் வரும் 24ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 1ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<<

மலேசியாவில் நடைபெற்று வரும் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Anmol Kharb காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-13, 21-23, 21-16 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் Tidapron Kleebyeesun-ஐ வென்றார்.

மற்றொரு மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் வெற்றிபெற்று Rakshitha Sree-ம் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

>>>>>><<<<<<

எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்று வரும் உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Aanya Bisht – Angel Punera இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

சிட்னி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Varun Kapur, Aesha Gandhi, Ansh Negi, Garima Kundu, Ginpaul Sonna, Aadha Shine ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>>END<<<<<<